10 குழந்தைகள் பலி:

# உ.பி. அரசுக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ்!

லக்னோ,நவ.17-

உத்தரபிரதேச மாநிலம் ஜான்சி மாவட்டத்தில் உள்ள மகாராணி லட்சுமி பாய் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் குழந்தைகள் பராமரிப்பு வார்டில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

தகவலறிந்து தீயணைப்புத் துறை மற்றும் ராணுவ தீயணைப்பு வாகனம் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயை கட்டுக்குள் கொண்டு வரும் பணியில் ஈடுபட்டன. எனினும் தீயில் கருகியும், கரும்புகை காரணமாக மூச்சுத் திணறல் ஏற்பட்டும் 10 பச்சிளம் குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தது. 16 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. 37 குழந்தைகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

மின்கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும், துணை முதல்-மந்திரி பிரிஜேஷ் பதக் மற்றும் முதன்மை சுகாதார செயலர் ஆகியோரை சம்பவ இடத்துக்கு அனுப்பியதாக மாநில அரசின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், துணை முதல்-மந்திரி பிரஜேஷ் பதக் இன்று, சம்பவம் நடந்த இடத்துக்கு சென்று பார்வையிட்டார்.

இதனிடையே, காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க மாவட்ட நிர்வாக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் பதிவில், "ஜான்சி மாவட்டத்தில் உள்ள மருத்துவக் கல்லூரியின் என்.ஐ.சி.யூ.வில் நடந்த விபத்தில் குழந்தைகள் இறந்தது மிகவும் வருத்தமாகவும், மன வேதனையாகவும் இருக்கிறது. போர்க்கால அடிப்படையில் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது" என்று யோகி ஆதித்யநாத் பதிவிட்டிருந்தார்.

இதுகுறித்து, பிரதமர் மோடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "உத்தரப் பிரதேச மாநிலம் ஜான்சி மருத்துவக் கல்லூரியில் ஏற்பட்ட தீ விபத்து நெஞ்சை உலுக்கும் வகையில் உள்ளது. அப்பாவி குழந்தைகளை இழந்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள். அவர்களுக்கு இந்த துயரத்தை தாங்கும் சக்தியை தர இறைவனை பிரார்த்திக்கிறோம். மாநில அரசின் மேற்பார்வையின் கீழ், உள்ளூர் நிர்வாகம் நிவாரணம் மற்றும் மீட்புக்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு பிரதமர் நிவாரண நிதியில் இருந்து இருந்து ரூ.2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் வழங்கப்படும்" என்று தெரிவித்திருந்தார்.

உ.பி. முதல்-மந்திரி யோகி ஆதித்யாநாத் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் நிவாரணத் தொகையாக வழங்கப்படும்" என்று தெரிவித்திருந்தார். ஜான்சி மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 10 குழந்தைகள் உயிரிழந்தது குறித்து விசாரணை நடத்த யோகி அரசு விசாரணைக் குழுவை அமைத்துள்ளது.

இந்நிலையில் இந்த சம்பவம் குறித்து ஒரு வாரத்திற்குள் விரிவான அறிக்கை அளிக்குமாறு உ.பி. மாநில தலைமைச் செயலாளர் மற்றும் காவல்துறை இயக்குநர் ஜெனரல் ஆகியோருக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

இதுதொடர்பாக வெளியான அறிக்கையில், "பதிவு செய்யப்பட்ட எப்ஐஆரின் நிலை, பொறுப்பான அதிகாரிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், காயமடைந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு ஏதேனும் இருந்தால் வழங்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க அதிகாரிகள் எடுத்த அல்லது முன்மொழிந்த நடவடிக்கைகள் குறித்தும் ஆணையம் அறிய விரும்புகிறது" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேலம் அரசிபாளையத்தில்

# 355 மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

சேலம்,நவ.17-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம், அரிசிபாளையம் செயிண்ட் மேரிஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2024-25-ஆம் கல்வி ஆண்டிற்கான விலையில்லா மிதிவண்டிகளை மாணவிகளுக்கு நேற்று (16.11.2024) வழங்கினார். பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அரசின் பல்வேறு துறைகளில் சிறப்பான நிருவாகத்தை வழங்கி வருகிறார்கள்.

அதன்படி, தமிழ்நாடு பல்வேறு துறைகளில் இந்திய அளவில் முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டில் மற்ற துறைகளைக் காட்டிலும் பள்ளிக்கல்வித் துறைக்கென கடந்த மூன்றரை ஆண்டுகளில் அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக, புதுமைப்பெண் திட்டம் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் மூலம் மாதந்தோறும் ரூ.1,000/- வழங்கும் வகையில் மூன்று ஆண்டுகளுக்கு ரூ.36,000/- எனவும், ஐந்து ஆண்டுகள் படித்தால் ரூ.60,000/- என்ற வகையிலும் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் தொடர்ந்து இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறார்கள்.

அந்தவகையில், சேலம் மாவட்டத்தில் 2024-25-ஆம் கல்வி ஆண்டிற்கான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பயிலும் 11,726 மாணவர்களுக்கும், 14,548 மாணவிகளுக்கும் என மொத்தம் 26,274 மாணாக்கர்களுக்கு ரூ.12.43 கோடி மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் வகையில் இத்திட்டம் கடந்த 29.10.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்தொடர்ச்சியாக, இன்றையதினம் சேலம், அரிசிபாளையம் செயிண்ட் மேரிஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இப்பள்ளியை சேர்ந்த 355 மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிள் வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற தமிழ்நாடு அரசால் செயல்படுத்தக்கூடிய பல்வேறு திட்டங்களை பள்ளி மாணவ, மாணவிகள் நல்லமுறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வில் சிறந்த நிலையை அடைய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா. பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், முதன்மைக்கல்வி அலுவலர் முனைவர் மு.கபீர், மாமன்ற உறுப்பினர் திருமதி.சவிதா பிரகாஷ் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் மாணவிகள் கலந்துகொண்டனர்.

வானிலை முன்னறிவிப்பு:

# இன்று 3 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை,நவ.17-

குமரிக் கடல் மற்றும் தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, இன்று (நவ.17) மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: குமரிக் கடல் மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.



முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில், வாக்காளர் பட்டியலில் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் செய்யும் பணிகளுக்காக நேற்று 73,73(அ),75,75(அ), 76,76(அ) ஆகிய வார்டுகளில் நடைபெற்ற சிறப்பு முகாமினை பார்வையிட்டார். திரு.வி.க நகர் தெற்கு பகுதி செயலாளர் எம்.சாமிக்கண்ணு, வட்ட செயலாளர்கள் எம்.தமீம், பொல்லு டி.சுரேஷ், வி.கே. வெங்கடேசன்,எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா:

# எழும்பூர் தொகுதியில் 1,500 குடும்பங்களுக்கு நலத் திட்ட உதவிகள்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, நவ.17-

கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் எதிர்வரும் நவம்பர் 27அன்று வருவதை முன்னிட்டு, எழும்பூர் தொகுதியில் ஏழைஎளியோருக்கு உதவிடும் வகையில் நலத்திட்ட உதவிகள்; நம்ம எக்மோர் உதயநிதி ஸ்டாலின் ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் பள்ளி, கல்லூரி மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் கழகச் சட்டத் துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் 10.11.2024 முதல் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இதனின் இரண்டாவது நிகழ்வாக 16.11.2024 அன்று, எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61, எழும்பூர் ஆல்பர்ட் திரையரங்கம் எதிரிலுள்ள பொன்னியம்மன் கோவில் தெருவில் நடந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், 1,500 ஏழை எளிய குடும்பங்களுக்கு ஐந்து கிலோ கொண்ட அரிசிப் பை, புடவை, பெட் ஷீட், கைலி மற்றும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, சர்க்கரை, கோதுமை மாவு, ரவை, சாம்பார் மிளகாய்த் தூள், சமையல் எண்ணெய், கடுகு, வெந்தயம், சீரகம் உள்ளிட்ட 10 மளிகைப் பொருட்கள் கொண்ட தொகுப்பு ஆகியவற்றை சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் வழங்கினார்.

அப்பொழுது சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் பேசியதாவது:

தி.மு.க.வில் தலைவர்களுக்காகக் கொண்டாடப்படும் பிறந்தநாள் விழாக்கள், ஏழைஎளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, அவர்களின் முகங்களில் காணப்படும் சிரிப்பைக் கண்டு மகிழ்ச்சியடையவே. தேர்தல் நேரத்தில் மட்டும் மக்களைச் சந்திக்கும் கட்சி அல்ல தி.மு.க. கொரோனா காலத்தில் நாட்டை ஆண்டு கொண்டிருந்த பழனிச்சாமி கூட மக்களைச் சந்திக்க அஞ்சிய நிலையில், அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த முதலமைச்சர் தளபதி அவர்களும் கழக இளைஞரணிச் செயலாளரும் தி.மு.க.வினரும் உயிரைத் துச்சமாக மதித்து களத்தில் நின்று மக்கள் பணியாற்றினார்கள்.

எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் அரசியலில் இருக்கிறோமோ என்பதைத் தினந்தோறும் கிள்ளிப் பார்த்துக் கொள்ள வேண்டிய பரிதாபச் சூழலில்தான் இருக்கிறார். முதலமைச்சர் சொன்னதைப் போல எடப்பாடி அவர்கள் மேக்கப் போட்டுக்கொண்டு விதவிதமாகப் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறார். மேக்கப் போட்டு பொய் சொல்பவரின் சாயம் வெளுக்கும். உண்மையான எதிர்க்கட்சித் தலைவராக இருந்து மக்களுக்குப் பணியாற்றாமல், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே அரசியலில் தன் இருப்பைத் தக்க வைத்துக்கொண்டிருக்கும் எடப்பாடி பழனிச்சாமி, நீதிமன்ற படிக்கட்டுகளில் ஏறுவதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார். எடப்பாடி பழனிச்சாமிக்கு சம்மன் கொடுத்து ஏன் விசாரிக்கவில்லை என உயர்நீதிமன்றம் கேட்டிருக்கிறது. அவர் அதற்கு மட்டுமே முழுக் கவனம் செலுத்தும் சூழல் ஏற்படும் எனக் கூறினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், கி.புஷ்பராஜ், பிரம்மதேவன், பாலாஜி அன்புமணி, எட்டு என்ற விஜயகுமார், குணசேகரன், 61வது வட்ட முன்னாள் துணைச் செயலாளர் மு.முருகையன், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர். புருசோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, கமலக்கண்ணன்; எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையரசன், 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், 77வது வட்ட அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெயலட்சுமி, தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி, ஜெ.சரவணன், 58வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் சரண்குமார், 108 'அ' வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு. சதிஷ்குமார், 108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், வழக்கறிஞர் நேரு பிரபா, கோமகன், விஜய் தேவராஜ், முத்து, பாக முகவர் கவிதா, சத்யா, அசினா பேகம், கே.பி. பார்க் சதிஷ், நாகராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




செங்கல்பட்டு மாவட்டம்,வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2025 தேர்தல் மேற்பார்வையாளர் கூட்டம் தமிழ்நாடு கனிம நிறுவன முதன்மை செயலாளரும், செங்கல்பட்டு மாவட்ட தேர்தல் மேற் பார்வையாளருமான அனில் மேஷ்ராம் தலைமையில், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான ச.அருண்ராஜ் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா கலந்து கொண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல்,இறந்தவர்களின் பெயர்களை நீக்குதல், இரட்டை பதிவு , முகவரி மாற்றம், ஆகிய பணிகளை முறையாக ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்த பணியை பல ஆண்டுகள் மேற்கொண்டு வந்தாலும் தொடர்ந்து குளறுபடிகள் ஏற்பட்டு வருவதாகவும் இனி வரும் காலங்களில் அதுபோன்று இல்லாமல் இறப்பு நீக்கல்,புதிய வாக்காளர்கள் சேர்த்தல், விலாசம் மாற்றம் என அனைத்திலும் ஒரு சிறந்த வாக்காளர்கள் புத்தகமாக இனி வரும் காலங்களில் வாழங்கிட ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் பி.சுபா நந்தினி, மாவட்ட சார் ஆட்சியர் வி.எஸ்.நாராயண சர்மா மற்றும் அரசு உயர் அலுவலர்கள், அங்கீகரிக்கபட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.



கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் எதிர்வரும் நவம்பர் 27அன்று வருவதை முன்னிட்டு, எழும்பூர் தொகுதியில் இரண்டாவது நிகழ்வாக, வார்டு எண்.61, எழும்பூர் ஆல்பர்ட் திரையரங்கம் எதிரிலுள்ள பொன்னியம்மன் கோவில் தெருவில் நடந்த நிகழ்ச்சியில் 1,500 ஏழைஎளிய குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகளைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் வழங்கினார்.

